இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவபபிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 56

புத்-கூ] யாழ்ப்பாணம்:- காலயுத்தி ஞு ஐப்பசி மீ க0 உ வெள்ளிக்கிழமை (27 10-1978) [இல-உசு


கோயில் வணக்கம் குறிக்கும் நாள் —

## தீபாவலித் தினம்

ஆடிநீர் அங்கம் அகமும் அழுக்கா றகல அன்பு
கூடியேகோவினைக் கும்பிட் டுழைப்பினற் கொண்ட
வெழிற்
கோடியும் போர்த்தரன் கோயில் வணங்கல் குறிக்கு
மிந்நாள்
ஆடிசைக் கோழி அழி மது உண்ணின் அடுபழியே.

நீர் ஆடி உள்ளும் புறமும் சுத்தியாகி அன்பு மிளிர அரனுக்கு அஞ்சாடும் ஆன இனததைக் கும்பிட்டு ஒவ்வொருவரும் தனது முயற்சியினல் உழைத்த பொன் கொண்டு பெற்ற புத்தாடையுடுத்து ஈசன் கோயிலில் வழிபாடு செய்து நிற்பதைக் குறிக்கும் தீபாவலித் தினத்தில் ஆட்டினையும் இசைக்கும் (கூவும்) கோழியையும் கொன்று மதுவுடன் உண்ணுவது அடாத மாபழிச் செயலாகும்.

# சிவாலய வழிபாடு

## தெய்வத்தை நொந்தக்கால் எய்த வருமோ?

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி, கணபதிப்பிள்ளை அவர்கள்

தேவர்களுக்குப் புலவர்கள் என்றும் பெயர். புலம் அறிவு. அசுர சத்தி மேலிடும்போது புலவர்களாகிய தேவர்கள் தம் நிலைமை அறிந்து தவம் மேற்கொள்வர். இதனைக் கந்தபுராணத்திற் படிக்கின்றோம்

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு"

என்பது திருவள்ளுவர் வாக்கு. அவ்வாக்கு. நாமெல்லாம் தவம் செய்து உய்யும் பொருட்டு வழி காட்டுகின்றது. இரட்டை வழி; இராச பாதை.

முதலாவது வழி: 'உற்ற நோய் நோன்றல்' நோன்றல் — பொறுத்தல்.

நமது துன்ப அநுபவங்களுக்கு நாமே கருத்தா. நமது சம்பாதியங்களை நாம் மனம் ஒத்து அநுபவித்தல் வேண்டும். பிறர் வெறுங் கருவிகள். பிறரை நோவது எய்தவனிருக்க அம்பை நோவதாம்.

பிறரை நோதல், தெய்வத்தைத் திட்டுதல் மேலும் வினையைக் கூட்டுவதாம். துன்ப அநுபவம் பொறுக்க முடியாதாயின்; தாங்க முடியவில்லையே என்று தெய்வத்தை வேண்டலாம்.

பிறரையோ தெய்வத்தையோ நோதல் மகா மகா தவறு.

X X X

தவத்தின் இரண்டாவது வழி:-

'உயிர்க்கு உறுகண் செய்யாமை' உறுகண் - துன்பம்.

நமது வாழ்க்கை, பிற உயிர்க்குத் துன்பம் விளையாமல் அமைதல் வேண்டும்.

மனத்தால், வாக்கால், செயலால் மற்றை உயிர்க்குத் துன்பம் விளையுமானல் அது நம் வாழ்க்கையைப் பாழ் செய்துவிடும்.

துன்புறுவோன், தன் வினை தன்னைச் சுட்டது என்று பரிகாரங் கண்டு சாந்தியுறுவன்.

துன்புறுத்துவோனுக்குப் பரிகாரமேயில்லை பெரியோர்கள் துன்புறுத்துவோன் நிலைக்குத்தான் பரிதாபம் உறுவர்.

துன்புறுத்துவோன், எடுத்த பிறப்பைப் பாழ் செய்வதன்றி, மேலும் எண்ணிறந்த பிறப்பைப் பாழ் செய்கின்றன்.

ஓர் உயிரைத் தண்டிக்க இறைவனைத் தவிர எவன் ஒருவனுக்கும் அதிகாரம் இல்லை.

இரண்டு அம்சங்கள் கொண்ட இத் தவத்தை யாவரும் தலைமேற்கொண்டு உய்திகூடக் கடவர்.

(வளர்ச்சி 2-ம் பக்கம்)

### கந்தசஷ்டி திருவிழா

நாவலப்பிட்டி நகரில் எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் நிகழும் காலயுத்தி வருடம் ஐப்பசித் திங்கள் 15-ஆம் நாள் (1-11-78) புதன்கிழமை கந்த சஷ்டிப் பெருவிழா ஆரம்பமாகி (8-11 78) புதன்கிழமை நடைபெறவிருக்கும் மஞ்சள் நீர் உற்ஸவத்துடன் பூர்த்தியாகும். ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா அவர்கள் 8 நாளும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

— —

### சிவநெறிக் கழகத்தில் இலக்கிய கலாநிதி

கீரிமலைச் சிவன்கோயில் முன் மண்டபத்தில் ஐப்பசி 12-ம் நாள் (29-10-1978) பிற்பகல் 3 மணியளவில் பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள் தலைமையில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களுக்குப் பாராட்டு விழா நிகழும்.

### இந்துக் கல்லூரிப் பரிசுத் தினம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நாளை மாலை 6 மணிக்குப் பரிசுத் தின நிகழ்ச்சிகள் நடைபெறும்

கலாநிதி ச. மூத்துலிங்கம் அவர்கள் பரிசளிப்புப் பேருரை வழங்குவர்; திருமதி தனலக்குமி முத்துலிங்கம் அவர்கள் பரிசில்களை வழங்குவர்

— —

# கந்த சஷ்டி விரதம்

— திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்கள் —

உலகத்திலே சிறந்த செல்வம் படைத்தவர் சிலரும் வறுமையாகிய தீயின் மேல் கிடந்து வாடுகின்றவர் பலருமாக இருக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன?

இறைவனை நினைந்து நல்ல விரதங்களை நோற்றவர் சிலர். விரதங்களை நோவாதவர் பலர். முற்பிறப்பில் நல்ல விரதங்களை நோற்று இறைவனை வழிபட்டவர் இப்பிறப்பில் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழ்வர். அல்லாதவர் வறுமையில் ஆழ்ந்து வருந்துவர் எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்.

"இரை தேடுவதோடு இறையுந் தேடு" என பாம்பன் சுவாமிகள் கூறுவார். எனவே மனிதப் பிறப்பெடுத்த நாம் அதனை நமக்குத் தந்த தலைவனைக் குறித்து விரதங்களிருந்து வேண்டுதல் வேண்டும்.

எளிதிலே அருள் புரியும் மூர்த்தி கலியுக வரதராகிய கந்தக் கடவுள். அவர் தலையாய தேவாதி தேவர்க்கெல்லாம் தலையாய தனிப்பெருந் தலைவர் 'மாலயனுக்கு அரியான்; மாதவரைப் பிரியான்' என்பார் அவரைப் பற்றி அருணகிரிநாதர். முருகப் பெருமானை நினைந்து நல்விரதங்களைமாற்றி வழிபாடு செய்தோர் எல்லா நலன்களையும் எளிதிற் பெறுவர். முருகவேளுடைய விரதங்களுள் தலையாய விரதம் கந்தசஷ்டி.

ஐப்பசித் திங்கள் அமா

வளர்ச்சி 2-ஆம் பக்கம்

அகத்திற் தோன்றும் ஆறுமுகன் ஆறுநாள் விரதம் — 2

# சஷ்டி விரதத்துக்கு இஷ்ட வடிவம்

உள்ளடி வரைகள் யாவு
மொரண்புற வடியி னித்தம்
வள்ளுகிர் விரல்கண் முற்றும்
வானுரு மேறு நாள்கோள்
எள்ளரும் பாடு தன்னி
னிரும்புனற்கிறைவன் சோமன்
நள்ளிரு ளனைய மேனி
நிருதியோ டரக்கர் நண்ண

அத் திருவடிவத்திலே பாதங்களின் நடுவிலே சகல மலைகள் யாவும்; அழகிய பாதங்களின் முற்பாகத்திலே கடல்களும் நெருங்கிய நகங்கள் பொருந்திய விரல்களில் ஆகாயத்திலுள்ள மின்னும நட்சத்திரங்களும் சூரியன் முதலிய கிரகங்களும சிறந்த பரடுகளில் பெருமை பொருந்திய வருணனும குபேரனும், பேரிருளை யொத்த கரிய வடிவத்தினையுடைய நிருதியும் இராக்கதரும்பொருந்த.

வருணன்குபேரன் நிருதி ஆகிய இவர்கள் திக்குப் பாலகர்கள், கோள்களாவன:— பூமியோடு நெருங்கிய தொடர்புடைய சூரியன், சந்திரன, செவ்வாய் முதலிய விண்மீன்கள்.

நாள்களாவன:- சந்திரனுடைய மார்க்கத்தோடு தொடர்புடையனவாகிய அசுவினி, பரணி முதலிய விண்மீன் கூட்டங்கள்.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்கவையகமுந்துயர் தீர்கவே;
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

காலயுக்தி ஞூ ஐப்பசி 10-உ
(27-10-78) வெள்ளிக்கிழமை


## இல்லங்கள் தோறும் இயக்கங்கள்

மாநாடு கூடுவதும் மரபு வழி திர்ணயங்களை நிறைவேற்றுவதும் வானமுந் துளங்க வாய் வீச்சு வீரம் காட்டுவதும் சமயப் பணியோ சமூக சேவையோ ஆகமாட்டா.

ஆண்டுக்கொருமுறை ஆண்டிகள் மடங்கட்டுவது போல மாண்டும் அவைகள் பேரவைகள், சபைகள், மகாசபைகள், கருத்தும் கவியும் பொருத்தும் அரங்குகள் விழாக்கோலம் பூண்டு நிகழ்வதனல் ஆய பன் தானென்ன?

"சொன்னோம் சென்றமுறை; என்ன செய்தோம் பின்" என்று நாமே நம்மிடம் கருத்தரங்கை வைத்தால் மனச் சான்று மாறுதான் செய்யும்,

சமயம் என்றாலும் சமூகமென்றாலும் பணிக்கிடமாகும் பொழுது குறிக்கோளாக்கக் கொளளப்படுவது நாட்டில் நன்னெறியை நிலை நாட்டுவதே.

கொலை, களவு, கள் காமம் முதலியன மாபாவங்கள் என்று சமயிகள் சொல்வதையே சமூகமும் சொல்வது வழக்கம். நாட்டிலே கொலையும் களவும் கூடிக்கொண்டே வருகின்றன வெளிபதுண்மை இதை எந்த மன்றமோ சபையோ சங்கமோ மறுக்க முடியாது. இந்த விபரீதம் ஏன் நிகழ்கின்றது?

கோடானு கோடி கூட்டங்கள் கூடிவிட்டோமே! கொள்கைகளை விளக்கிவிட்டோமே! இருந்தும் படுகொலைகளும் பகற்கொள்ளைகளும் பன் மடங்காகி விட்டனவே;

ஊருக்குபதேசம் செய்வதை யாராவது உற்றுக் கேட்டு ஊன்றி நினைக்கின்றார்களா? இல்லை. கும்பலிலே கரகோஷம் செய்வதேயன்றி கருத்துக்களை உள்ளத்தில் இருத்துவாரில்லை

ஆகவே நாமொன்று ஆலோசனையாகக் கூறுகின்றோம்.

விழா வேண்டாம்; வீண் விரயம வேண்டாம், பரோபகாரப் பணியில் ஈடுபடுபவர்கள் இல்லங்கள் தோறும் சென்று அளவளாவிப் பேசி உள்ள நிலைமையையுற்றுணர்ந்து நல்ல வழியில வாழ்க்கை நடைபெற வழி காட்டுவார்களேயானல் எவ் விதத்திலும் சிலராவது சிந்தனை செய்வர்; சீர் திருந்துவர்.

யோக சுவாமிகளின் உபதேச முறை இதுவேயாகும், மாநாட்டைக் கண்டிருக்க மாட்டார் அப் பெருந்தகையார் அவர் செப்புவன எல்லாம் அப்படியே மனத்தில் அமையும். பலர் சிரான்றோர்கள் யோகமகான் சொற்களைக் கேட்டு,

எனவே உண்மையாக ஊருக்குழைப்பது எங்கள் விருப்பமாயிருந்தால் இல்லங்கள் தோறும் சென்று சென்று சொல்லுவோம் முன்னோர் காட்டிய நன்முறையை,

இந்த வழியிலே இந்து சாதனமும் இல்லங்கள் தோறும் செல்லுமாயின் சிந்தனைச் சிறப்பை இல்லத்தோர் எய்துவர்.

———

## அர்த்தமுள்ள சைவ மதம் என்ன சொன்னது?

நாவுக்கரசர் நவின்றபடி.

திருச்சிற்றம்பலம்

பந்தித்த பாவங்கள் அம்மையிற் செய்தன இம்மைவந்து
சந்தித்த பின்னைச் சமழ்ப்பதென்னே வந்தமரர் முன்னாள்
முந்திச் செழுமல ரிட்டு முடிதாழ்த் தடிவணங்கும்
நந்திக்கு முந்துற ஆட்செய்கி லாவிட்ட நன்னெஞ்சமே.

திருச்சிற்றம்பலம்,

வினைப்போகம் இத்தேகம் பின் ஏன் வருந்துவதோயாம். செய்யவேண்டியவற்றை விடுகின்றோம். மலரிட்டவன் றாள் வணங்குகின்றோமில்லையே இனிப்பாவஞ் செய்யாது விட என்று நெஞ்சுக்கோர் நினை வூட்டல் காண்க.

## வெள்ளி விரதம்

— அருட்கவி சீ. விநாசித்தம்பி —

வள்ளிக்கு வாய்த்த வடிவேல னாறெழுத்தை
வெள்ளிக கிழமை விரதத்தோர் — உள்ளத்
தெழுதித் துதித்துணர்நதால் ஒங்குசுக செல்வப்
பழம்பெறலாம் கைமேற் பலன்.

* * *

பலபூசை யாற்றிப் பன்னிருகை வேலன்
மலரடியை யாறெழுத்தால் வாழ்த்தி — நலமேவும்
சுக்கிரவா ரத்தில் துதிப்போர் சிவஞானப்
பக்குவத்தைக் காண்பார் பயின்று.

தோத்திரம்

சரவண பவனே ஞான
சத்திவே லழகா வேதப்
பிரணவ குருவே நாயேன்
பிழைபொறுத் தருள்வாய் போற்றி
மரணமில் லாத வாழ்வும்
மருவுநின் னடிம றக்காக்
கரணமும் புலனும் நல்கும்
கந்தனே போற்றி போற்றி.

## கந்தசஷ்டி

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

வாசைக்கு மறுநாள் வளர்பிறை பிரதமையிலிருந்து கந்தசஷ்டி விரதம் தொடங்க வேண்டும்.

பிரதமையன்று எழுந்து அதிகாலையில், நதியானல் நீரின் எதிர் முகமாக நின்றும், கிணறு, குளங்களாயின் வடக்கு நோக்கி நின்றும் தண்ணீரில் அறுகோணம் வரைந்து அதில சடாட்சரமந்திரம் (சரவணபவ) எழுதி இடையே பிரணவத்தை எழுதி, அத் தண்ணீரைச் சிவ கங்கையாகப் பாவனை செய்து வணங்கி அதில் முழுக வேண்டும்.

பின்னர் தோய்த்து உலர்ந்த தூய ஆடைகளை உடுதது அனுஷ்டானம் புரிந்து, முருகப்பெருமானுடைய திருக்கோயிலுக்குச் சென்று மலர் இட்டு விதிப்படி வலம் வந்து திருப்புகழ, திருமுருகாற்றுப்படை கந்தர்கலிவெணபா, கந்தர் அநுபூதி இவைகளை ஓதி உள்ளம உருகி ஒருமையுடன வழிபட வேண்டும.

இவ்வாறு 5 நாட்கள் நோற்ற பின ஆருவது நாள் சஷ்டியனறு, முன் போலவே நீராடி சிறப்பாகச் செபம், தவம், தியானங்களைச் செய்யவேண்டும். அதிக பாராயணம், பிரார்த்தனைசெய்து சிந்தனை முழுவதும் முருகன் திருவடிககே செலுத்த வேண்டும். அன்று இரவு ஆறு காலங்களில் முருகன் திருவுருவத்திற்கு ஆயிரத்தெட்டு மந்திரங்களால் அருச்சனை புரிய வேண்டும். உறங்காமல் உணர்வுடன் குழைந்த உள்ளத்துடன் துதித்து வடிவேலிறைவனை வழிபட வேண்டும்.

மறுநாள் சப்தமித் திதியன்று நீராடி வழிபாடு முடித்த பின் ஆறு அடியார்களுக்கு அன்னம் வழங்கி உணவு கொள்ள வேண்டும். அன்று பகலில் நித்திரைசெய்யக் கூடாது.

ஆறு நாட்களிலும் பூரண உபவாசம இருக்க முடியாதவர்கள், ஐந்து நாட்கள் பால பழமுண்டு சஷ்டியன்று முழு உபவாசமாக இருக்க வேண்டும.

இதுவும் மாட்டாதவர்கள் 5 நாட்களில உச்சி வேளையில் இறைவனுக்கு நிவேதித்த உணவையுண்டு இரவு பட்டினியாக இருந்து. ஆருவதுநாள் மிகவும் அன்புடன் உபவாசமாக இருந்து வழிபடல் வேண்டும் ஐந்து நாட்களிலும் படுக்கையில் இருக்கக் கூடாது. தூயபட்டு விரித்து அதன் மீது படுந்து இதயத்தில் முருகனை நிறுத்தி அகக கண்ணால் நோக்கித் தியானித்தபடி உறங்க வேண்டும். இவ்வாறு சஷ்டி விரதமிருப்போர் மகப்பேறு முதலிய எல்லா நலங்களையும் எளிதிற் பெறுவர். இவ் விரதத்தைப்பற்றிக் கந்தபுராணம் கந்தவிரதப் படலத்தில் விரிவாகக் காணலாம்.

(கொழும்பு கொம்பனித் தெரு சுவசுப்பிரமணியசுவாமி கோவிலார் உதவியது)

## சிவாலய வழிபாடு

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

நாள் தோறும் எவரையும் நோவாது துன்பத்தை அநுபவித்தலிலும் மற்றொரு உயிருக்குத் துன்பம் விளையாமல் நடத்தலிலும் பரிசோதனங்கள் நடத்தித் திருத்தங்களை நமது வாழ்க்கையில் மேற்கொள்ளல் வேண்டும்.

படுக்கைக்குப் போகும்போது மூன்று நிமிஷம் படுக்கை விட்டெழும்போது இரண்டு நிமிஷம் மொத்தம் ஐந்து நிமிஷ நேரம் மேற்படி சிந்தனைகளுக்கென்று நேரம் ஒதுக்கி வைப்பது மிக முக்கியம்,

தவறுகளைப் பரிகரித்துத் திருத்தங்களுக்குச் சங்கற்பம் செய்துகொள்ளல் வேண்டும்,

X X X

இவ்வாறு தவத்தைப் பெருக்கப் பெருக்கத் திருவருளின் சாயலின் சாயலைச் சிறிய அளவுக்காயினும் எட்டலாம். திருவருளை எட்ட எட்ட சுற்றுடல் தன் விஷயத்தில் சாந்த முறுவதைக் காணலாம், பகை நெகிழ்ந்துவிடும்.

X X X X

முனிவர்கள் திருவருளை நேரே அனுபவர்கள் அவர்கள் காட்டுக்குள் எறிகுண்டோ, துவக்கோ வைத்திருப்பதில்லை. தர்ப்பைக் கட்டு மாத்திரம் வைத்திருப்பார்கள்.

ஓமம் வளர்க்கும்போது காடிகள் விறகொடித்து ஓமத்திலிட்டுத் தொண்டு செய்யும் புலிகள் பூனைகளாய்விடும்.

முனிவர்கள் முன்னிலையில அவர்கள்பால் உள்ள அருள் அந்த மட்டத்துக்கு துஷ்ட மிருகங்களிலும் மேவிட்டு அவற்றிலுள்ள துஷ்ட குணங்களை அகற்றிவிடும்.

பெரியோர்கள் முன்னிலையிலும், புண்ணிய ஸ்தலங்களிலும் எங்கள் துட்டப் போக்குக்கள் அடங்கி நன்மை மேலிடுவதிலிருந்து, தவத்தாலெய்தும் அருளின் அருமைப்பாட்டை அறியலாம்.

நமது நாட்டில் ஒரு காலத்தில் தவம் இருந்தது; திருக்கேதாரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கெழுந்தருளி நல்லூரில் கைலாசநாதரா யமர்ந்த தைவிக லிங்கப் பெருமான் பறங்கிக்காரர் காலத்தில் இந்த மட்டுவிலுக்கெழுந்தருளிச் சந்திர மௌலீசராய்த் திருவருள் பாலித்தருளினா, இது தென்மராட்சியின் தவ விசேடம்,

திருக்கேதீச்சரம் நெடுங்காலம் காடாய்க் கிடந்தது' நாவலர், மறைந்த கேதீச்சரத்தைக் காண விழைந்து தவமிருந்தார். யாழ்ப்பாணத்தைத் தாண்டினர்; இப்பொழுது திருககேதீச்சரத் தரிசனம் ஓரளவு கிடைத்திருக்கின்றது, நாவலர் பெருமானின் தவம் இருந்தவாறு,

நம்மிடம் தவம் குடிகொள்ளுமாயின் நாடோறும் மேற் குறிப்பிட்டவாறு நம்மைத் திருத்தித் தவமிருப்போமாயின்,

சந்திர மௌலீசப் பெருமான் வெளிப்பட்டுக் காட்சியளித்தருள் புரிவர். இவ் விஷயத்திற் கண்ணுங் கருத்துமா யிருப்போமாக.

சிவாலய வழிபாடு வாழ்க்கையின் சீவநாடி.

## ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் அப்பிக் கண்டார் காளத்தி நாயனுர்

அப்பர் அடிவார் திருத்தாண்டகத்தில் 'கண்ணவன் காண் கண்ணொளி சேர் காட்சியான் காண்' என்று வரும் அடியைச் சிந்திக்கும் பொழுது கண்ணுதற் கடவுள் தானே காண்பவனுகியும் காட்டுபவனுகியும் காட்சிப் பொருளாயும் நிற்கும் நிலையை உற்றுணரலாம்.

கண்ணப்ப நாயனுரின் அன்பு நிலையைக் கண்டார், தான் அதனைக் கண்ணுற்றதாக நாயனுருக்குக் காட்டுபவனுய் நின்றுர். வேடுவ அடியார் கண்டு களித்து அன்பு கொண்டு அர்ச்சனை செய்யக் காட்சிப் பொருளானுர், திருக்காளத்தியில் எழுந்தருளிய சிவபெருமான்.

ஊனக் கண்ணை உதவி ஞானக் கண் பெற்ற கண்ணப்பநாயனுரின் பெருநிலையை மாணிக்கவாசக சுவாமிகள்,

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாஎன்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி.

கண்ணப்பரின் ஆழ்ந்த அன்பின் பெருமை யாரிடத்துமில்லையானுலும் அதற்கடுத்தபடியாக அவ்வன்பிலா வாதவூரடிகளை கண்ணுதற் கடவுள் கண்டார் என்னும்பொழுது 'கண்' செய்த கைங்கரியத்தின் பெருமையைக் காண்கின்ருேமல்லவா?

---

## கல்விக்கழக விடுதிச்சாலை உணவு கல்விக்கு உகந்ததாய் இருக்கவேண்டுமல்லவா?

செய்தித் தாள்களில் வெளிவந்த சில விஷயங்கள் பெற்ருர் மனதிலே திகிலூட்டக்கூடியனவாயிருக்கின்றன.

கல்விக் கழகம் என்றுல் கண்ணியமான நிலையம். நல் வழிகாட்டும் இல்லம், மாணுக்கர்களின் பரம்பரை மரபுக்கேற்ற பழக்க வழக்கம் பயிற்சியில் இருக்கவேண்டிய தானம்.

இந் நாட்டு மக்கள் மச்ச மாமிசத்தைப் புனிதமற்றவையெனுங் கொள்கையுடையோர். பழக்கப் பிழையால் அவ்வுணவை அருந்துபவர்களாகிவிட்டனர் பலர் என்றுலும் பழி பாதகம் என்ற பயம் அவ்வாறு தவறுமிழைப்பவர்களிடத்தில உதித்தபடியேயிருக்கும்.

ஆன் இனம் என்றுல் ஒருவராவது அதற்கு வணக்கம் செய்யாதிருக்கமாட்டார்.

வீடுகளிலே மாடு வளர்ப்பவர்கள் அறிவார் அதன் மகத்துவத்தை. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோர் வாழும் இக் காட்டில் இந்த மாடு வதை செய்யப்படுவதும் அதன் ஊன் உணவுக்காதலும் நிகழ்கின்றனவென்றுல் நெஞ்சு குமுறுகின்றதே! அதுவும் கல்விக் கழக விடுதிச் சாலைகளிலும் இந்தப் படுபாவம் இயற்றப்படுவதென்றுல எங்கே போகின்ருேம் நாம என்ற ஏக்கம எமமைத் தாக்குகின்றதே!

---

வாழ்குடா நாடும் - நீர்வளமும் — 2

## நீரைக் காக்க ஏரிகளைக் காக்கவும்

நில நீரின் கூடுதலான சேமிப்பிற்கு நாம் செய்ய வேண்டியவை:

1. தற்சமயம் இருக்கும் ஏரிகளை ஆழப்படுத்தி கூடுதலான மழைநீரைத் தேக்குதல் வேண்டும்.

2. புதிய ஏரிகள் அமைத்தல்வேண்டும். (உவர் நீர் அதிகரிப்பு உள்ள வட்டுக்கோட்டை, துனுலை போன்ற இடங்களில இருக்கும் உவர் நிலங்களில் இவ்வேரிகளை அமைத்துக்கொள்ளலாம்.)

3. வெள்ளக் காலங்களில் மழை நீர் கடலை நோக்கி முற்றும் ஒட விடாது கூடிய நாட்களுக்குத் தரிசுநிலங்களில் நீரைத் தேக்கி வைத்தல் வேண்டும்.

4. ஏரிகளின் கரையோரங்களில் வேம்பு, இலுப்பை, பனை புளி போன்ற மரங்களை நடுதல் வேண்டும்.

---

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.
**சித்தாந்த பரீட்சைகள் 1978.**
விண்ணப்ப இறுதி நாள்: 31—10—78
பரீட்சைக் காலம் : 29—12—78 31—12—78

---

## அகத்திற் தோன்றும்

(1-ம் பக்க வளர்ச்சி)

அடிதிரள் கணைக்கால் தன்னி
லாரிடர் மணிகள் சானு
வடிவமை முழந்தாள் விஞ்சை
வானவ ராதி யானேர்
தொடைதனின் மகவான்
மைந்தன் ருெடைமுத னடுவன் காலன்
கடிதடத் தசுரர் பக்கங்
கடவுளர் யாரு நிற்ப.

அடி இரண்ட கணைக் கால்களில், முனிவர்களும் சிந்தாமணி முதலிய தேவ மணிகளும், சானுவின் வடிவம் அமைந்த முழந்தாள்களில், மேலோராகிய வித்தியாதரர் முதலியோரும் தொடைதனிலே இந்திரனும் அவன் மகனுகிய சயந்தனும், தொடை மூலத்தில், யமனும் காலனும், அரையின் முற்பக்கத்தில் அசுரர்களும் விலாப் பக்கங்களிலே (இந்திர சயந்தரொழிந்த) தேவர்கள் யாவரும் நிற்க.

தட்டையான மலை நுனி அல்லது மலைப்பாகம் சானு எனப்படும். முழந்தாள் கட்டை வடிவினதாய் மலைபோலத் திண்ணியதாயிருத்தலால் அதற்குச் சானு உவமையாயிற்று. சிந்தாமணி என்பது விரும்பியவற்றையெல்லாம் கொடுக்கும் தெய்வத்தன்மையுள்ள இரத்தினம் என்பர். வானவர் என்பது மேலோர் காலன் யமனுக்குக் கீழே உள்ளவன்.

இருப்பினி ஞகர் கோச
வெல்லையின மருங்கே யுந்திக்
கருப்படு முயிர்கண் மார்பிற
கலைகண்முந் நூலிற் போதம்
அருப்பயி லுரோமத தண்ட
மங்கையி லகில போகந்
திருப்பெருந் தடந்தோள்
வைப்பிற் செங்கண்மால்
விரிஞ்சன் மேவ.

மூலாதாரத்தில நாகர்களும் குறிநுனியில் அமிர்தமும், உந்தியில் (அடிக்கடி பிற (ந்திற) க்கும் உயிர்களும், மார்பிலே சகல சாத்திரங்களும், உபவீதத்தில் ஞானமும், அரும்புகின்ற நுனி மயிரில் அண்டங்களும் உள்ளங் கையில் சகல போகப் பொருள்களும், அழகிய பெரிய அகன்ற தோள்களில், சிவந்த கண்களையுடைய விட்டுணுவும் பிரமாவும் இருக்க.

தேவர் முதலியோரும் கருப்பத்திலே தோன்றுபவராயினும், குறுகிய ஆயுள் உடைய மனிதர் முதலியோரே "கருப்படும் உயிர்கள்" எனப்பட்டனர்.

மகேசுரனுடைய இடத்தோளில் விட்டுணுவும், அவருடைய வலத்தோளிற் பிரமாவும் தோன்றினர் என்று வாதுளாகமம் கூறும். வளரும்

---

## பன்னிரு திருமுறைத் திரட்டு

### ஆத்மஜோதிப் பிரசுரம்

ஆத்மஜோதி ஆசிரியர் அவர்களாலே தொகுக்கப்பட்டு அழகாக அமைக்கப்பட்ட பன்னிரு திருமுறைத்திரட்டு நல்ல ஒழுங்குமுறையில் வகுக்கப்பட்டிருக்கின்றது.

பன்னிரு திருமுறைகளையும் பாராயணம் பண்ணுவோருக்கும் படிப்போருக்கும் பயன் பெறக் கூடியவகையில் பாவிப்புக்குரிய முறையில் இவ்வெளியீடு விளங்குகின்றது.

சுத்தமாகவும் தொடர்பு நெறியாகவும் இத்திரட்டு கவர்ச்சிகரமாயிருக்கின்றது. நல்லதொரு பணி.

---

## 'சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்'

[சைவப்பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம் B. A; B Sc திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை உபதலைவர், இலங்கை இந்து சமய விவகார ஆலோசனைக் குழு உறுப்பினர், முன்னைநாள் பரமேசுவரக் கல்லூரி அதிபர் அவர்கள் மேற்படி நூலுக்கு வழங்கிய ஆசியுரை]

சைவசித்தாந்த உணர்ச்சி, சைவாகம அறிவின்றி முற்றுப் பெறுவதில்லை. அங்ஙனமே சைவாகம உணர்ச்சி சைவ ஞானம் சைவக் கிரியை ஆகிய இரண்டும் உண்மையில் ஒன்றெனக் காணும் பேறு பெறுதலன்றி முற்றுப் பெறுவதில்லை. இந்த அடிப்படை உண்மையில வைத்து எடுக்கப்பட்டனவே எங்கள் ஆலயங்கள்.

இந்த ஆலயங்கள் சோழப்பேரரசின காலத்தில்தான் சிறிதும் நலிவுருத நிலையில செழித்து வளர்ந்து வந்தன. அதன் பின்னர் குறிப்பிட்ட இரண்டுமூன்று ஆலயங்கள் தவிர, ஏனையவற்றின சரித்திரம் மிக மிகப் பரிதாபமானதே. காரணம், சைவாலயங்களை முறையாகப் பரிபாலித்தருள வல்ல சைவ அரசர்கள் எமமதத்தில தோன்ருமையே. அவர்கள் தோன்றும் வரைக்கும், சைவ உணர்ச்சி மிக்க சைவ அறிஞர்கள் நூல்கள் வாயிலாகவும், பிரசங்கங்கள் மூலமாகவும் சைவக்கிரியை உண்மைகளை, திருநீறு பூசும் சைவசமயி ஒவ்வொருவருக்கும் இடித்து இடித்து உணர்த்திக் கொண்டு வருதல வேண்டும். இப் பணியை சைவாசாரியர் திரு. மு. கந்தையா B A அவர்கள் மிகுந்த சைவஉத்வேகத்துடன், மிகத்திறம்பட இந் நூல் வாயிலாக ஆற்றியுள்ளார்கள் 'சைவஒழுக்கமும், பரம்பரை முறையாக வந்து வாய்த்த சைவசித்தாந்த உணர்ச்சியும் கைவந்த சைவ நல்லாசாரிய பரம்பரையைச் சேர்ந்தவர்போல காணப்படுகின்ருர்,' என்று இந்நூல் ஆசிரியரைப் பற்றி முன்னுள் தபால் தந்தி அமைச்சர், கலாநிதி ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்கள் ஒரு தடவை கூறியதை இவ்வணிந்துரை முகத்தில் யான் கூருமலிருக்க முடியவில்லை

"சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்" என்ற இந்த நூல் எங்கள் சமூகத்தில் பல காரணங்களாலும் புகுந்துள்ள நம்பிக்கையின்மை, சோம்பல் முதலிய பொல்லாக் குணங்களை யெல்லாம் அகற்றி, சமயக் கிரியைகளில சதா நிகழ்ந்து கொண்டிருக்கும் தீட்டுகள் யாவற்றையும் போக்கி, ஒரு புதுச் சைவ சமூகத்தை நாங்கள் காண்பதற்கு ஒரு திறவு கோலாய் அமைய வேண்டு மென்று எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளை வணங்குகின்ருேம்.

---

## இன்று

கந்தர்மடம், அன்னசத்திர ஒழுங்கையில் அமைந்துள்ள வேம்படி ஸ்ரீ சத்தி விநாயகர் ஆலயத்தில் 27-10-78 வெள்ளிக் கிழமை மாலை 7 மணிக்கு, புதிதாக அமைக்கப்பெற்ற விநாயகர் விக்கிரகம் பிரதம குரு, சிவஸ்ரீ ப. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களாற் பிரதிட்டை செய்துவைக்கப்படும்.

---

## Glories of Shaivaism

(continued from page 4)

that what they ask for, sometimes they get it and at other times they do not get it. When they do not get it the better class of people satisfy themselves with the thought that their Karma does not justify their getting it and that nothing can alter the "Vidhi". The others blame God for not granting the request and get displeased with Him. It is distressing to hear even some educated people quoting Appar's line,

"வேண்டுவார் வேண்டுவதே
ஈவான் கண்டாய்"

in support of the practice of praying to God for worldly ends But they must have known to their cost that very often they did not get what they prayed for. They also know that the whole world, including atheists are getting a great many things they desire, without any appeal to God. Besides, Appar's line does not convey the meaning they give it. What it really seems to mean is that God gives only those things which the worshipper actually needs and which can ultimately help his spiritual progress.

Just as a physician prescribes only that kind of food which suits his patient and not other things that he may ask for, so our Lord Physician administers the Law of Karma in such a way as will give the soul the maximum help for its recovery from Anavic illness.

The offer of gifts to God in return for the granting of requests is based on the gross misunderstanding of the attributes of God. First of all, God is perfect and has no needs. He therefore has no need for the gifts of those who make requests. Secondly He has neither likes nor dislikes. So gifts cannot please Him. They also think that God can be flattered by special poojas but that if His dues are not paid He gets displeased and does them harm, These men bring God down to the level of third rate men.

(To be continued)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hindu Organ

Friday, October, 27. 1978

## PRAYER FOR PURITY

Deepavali Day as it popularly called is an occasion for remembering a significant event in the ancient past that expressed the spiritual theory of the ultimate extinction of egoism by superior soul force.

Narakasuran who finally came to his senses after a sustained confrontation with an Incarnation of Providence, however, wished that the succeeding generations should learn a great lesson from his sad fate and and advised that the anniversary of the day of the demolition of his devilish egoism should be observed in the form of purification by ablution, donning of new clothes, pure thoughts, noble deeds and pious prayer to Parameshwara.

A serious interpretation of the laudable sentiments of Narakasuran would mean cleansing ourselves of all impurities and equipping ourselves with everything pure. Hence the idea of new dresses and rows of illumination.

But the Lokayudhan always itching for sensual pleasures has taken advantage of this Deepavali occasion by indulging in all prohibited and sinful activities on that day. Taking alcoholic drinks, eating meat and eventually ending in disastrous brawls, have been the items on the agenda of the Lokayudan.

We who traditionally subscribe to the tenets of Saiva Siddhantha have been put into the sad plight of watching irreligious activities being performed on the Deepavali Day in Tamilakam. No serious attempt has been made to dissuade misguided persons from following this foolish and sinful way of celebrating the Deepavali Day.

On our part we wou'd suggest that legislation should be brought in to ban the use of liquor, the slaughter of animals and the sale of mutton, beef and other similar foods on all occasions that have a religious significance and on that account made Public Holidays.

## Saiva Periyar Centenary Reproduction

# GLORIES OF SHAIVAISM

*By S. Shivapadasundaram B. A.*

(continued from last issue)

### POPULAR SHAIVAISM

Popular Shaivaism is the religion of those who have no idea of the content of the Saiva Shastras. Their knowledge of religion consists of Puranic stories and of the religious beliefs current in their midst. They worships God, gods, men, women, giants, devils etc. Most of them wear sacred ashes, attend temple worship and observe fasts. Their conception of God ranges from that of the Creator of the Universe to that of a doll. Several of these think that the events of their lives in this world are written on their skulls, They believe in birth after death and are keen on performing post-mortem ceremonies. They have great belief in omens and in the chirping of lizards. Even very important projects are abandoned on the hearing of a lizard chirp. They are devotees of astrology, which causes them endless suffering.

The misfortune of the ordinary Shaivite is his ignorance of Shaivaism. He is a sheep. He says and does what men of his type say and do. Everything novel appeals to him. He has no means of distinguishing right from wrong.

At one time there were two distinct religions in Thamilagam. One of these is Shaivaism which was the religion of the cultured class. The other was a combination of human worship and devil worship. The Annamar and Nachimar were men and women of high rank whom their dependents adored while alive, and worshipped after death. Kaththavarayar was a giant. Madan, Karuppan, Veeran and Periyathambiran were devils. The Vairavar of the unrefined class is a preternatural being. A form of Kali also is worshipped by this class These are all beyond the pale of Shaivaism. In course of time, these two classes of people mixed up, with the result that the ignorant section of the refined class and the most fortunate section of the unrefined class became worshippers of God as well as man and devil.

There are three more beings worshipped by these people. One of these is Mary at the Madhu Church in North Ceylon which is regarded by Roman Catholics to be a holy shrine. Another being is Meera of Nagore in South-East India, held in great veneration by Muslims. Their worship had its birth in suggestions, and in its growth was due to the mercenary spirit, which was characteristic of their worship. If a Shaivite falls ill, his neighbour who has already become a votary of either of these [illegible] advises him to make an offer to the temple to get himself healed. The patient had already heard stories of miracles being performed there. He accepts the advise and makes the vow. When he recovers, he goes on a pilgrimage to the temple with his relations and friends, who also cherish reverence for the place. Whenever a man falls ill the probability is that he will recover, because of a large number of diseases to which a man is subject during his life time, he recovers from all except from the last one He would therefore, have recovered even if they had not made any offer to those beings.

The worship of the third extraneous being was imposed on the whole of Ceylon by a Sinhalese ruler. This being is Kannaki. Kannaki worship would have been given up on the death of the king who imposed it on them, if it were not for fact that men of our own religion had been officiating in Kannaki temples The belief in her divinity further grew out of a false story fabricated by story writers, that Kannaki was an incarnation of some deity. Whoever reads the story of Kannaki in the original work, Silappathikaram, would not accept the incarnation myth.

Silappathikaram says that when Kannaki proved to the king that the punishment of death given to her husband was unjust, the king was so shocked by the thought of having done an act of injutice that he died immediately. Neither history nor legend speaks of any other king who lost his life on the mere thought of having done an act of injustice

In the realm of justice, [illegible] kings. My reader, If you had been Kannaki, what would have been your feeling when you saw the king losing his life on the mere thought of having been unjust towards your husband? You stand before the corpse of the noble king What is the feeling that would arise in your mind when you see the corpse before you? When you went up to him you would have wished some adequate punishment to him for having caused the death of your husband. Is there a greater punishment, than death, not an ordinary form of death, but a death caused by the thought of having done a wrong? The scene does not end here The queen saw that the king, her husband, had died. The sight of his death took away her life Could a wife be loyal to her husband? Here are now two corpses, those of two of the noblest creations of God, one an ideal ruler and the other an ideal wife. My reader, what would you have felt if you had been in the position of Kannaki? Whatever you might have felt, Kannaki's thirst for vengeance still remained unquenched. Even devils are believed to be satisfied with the death of a single being. A story was further fabricated that a pinch of a pap of hers set fire to the city of Madura. How can such a being ever get such a super-natural power? Yet this being is worshipped by a large number of our people, and there are poojaries prepared to perform pooja to it. These poojaries are at best non-shaivites.

Most Shaivites wear sacred ashes. But there are a few in towns who are not keen on wearing it. Some of them are not prepared to take the trouble to make or procure it. Some others set so little value on it that they prefer to go with an empty forehead before their non-Shaivite bosses There was a time when it was the rule for boys and girls to get deeksha. Now it has become an exception and even the few who get deeksha either perform Panchakshara-japam mechanically or perform no japam at all. The indifference to the wearing of sacred ashes and to Panchakshara japam is entirely due to people's ignorance of their supreme value

We now come to their form of worship. A large proportion of Shaivites think of God everyday at the time they wear sacred ashes. Very few go to temple daily. A fairly good number go once a week, on Moodays or on Fridays The others attend temples when situations compel them. If a child falls ill, either the father or the mother goes to beg God to cure the child's illness This request may assume one of three forms (1) It may be a mere requst. (2) The request may be accompanied by a gift such as a special pooja or archana. (3) It may also be made with the promise of a gift if the prayer is granted.

These requests are made in the belief that they are likely to be granted. But everybody knows from his own experience,

(continued on page 3)

## Skanda Shasti

The devotees of the Lord Skanda (Lord of Kataragama) will observe fast and austerities for six days from 1st of November at the Sri Sivasubramaniya Swami Temple. Kew Road, Slave Island, Colombo. Devotees will participate in the chanting of the holy mantra of the Lord Skanda "Om Saravanabhava" continuously for all the six days and nights of Skanda Shasti.

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, October 27, 1978.*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org